


**14. 01. 2026**

தலைப்புச் செய்திகள்

1. பொங்கல் பண்டிகையின் முதல் நாளான போகி பண்டிகை தமிழகத்தில் இன்று உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

2. இயற்கை, குடும்பம், சமுதாயங்களுக்கிடையிலான சமத்துவத்தை பொங்கல் பிரதபலிப்பதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி வாழ்த்தியுள்ளார்.

3. தமிழ்நாடெங்கும் பொங்கும் பொங்கல், மகிழ்ச்சி பொங்கலாக அமைந்திட, வாழ்த்துகளை உரித்தாக்குவதாக முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

4. பகுதி நேர ஆசிரியர்களின் ஊதியம் 15 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படுவதாக பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி அறிவித்துள்ளார்.

5. ராஜ்கோட்டில் நியூசிலாந்துக்கு எதிரான 2-வது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இந்தியா முதலில் பேட் செய்கிறது.

இனி விரிவான செய்திகள்

*************

பிரதமர் - பொங்கல்

தமிழ்நாட்டில் உழவர் பெருமக்களை போற்றும் வகையில் கொண்டாடப்படும் பொங்கல் திருநாளின் முதல் நாளான போகிப்பண்டிகை இன்று உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

பழையன கழிதலும், புதியன புகுதலும் என்பதற்கு ஏற்ப மக்கள் தங்கள் வீடுகளை தூய்மைப்படுத்தி, பழைய பொருட்களை அகற்றி, வண்ணக் கோலங்களை இட்டு மகிழ்ச்சியுடன் இந்நாளை கொண்டாடி வருகின்றனர்.

சுற்றுசூழலுக்கு உகந்த வகையில், பிளாஸ்டிக் ரப்பர் போன்ற பொருட்களை எரிக்காமல், புகையில்லா போகியை கொண்டாடுமாறு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப அனைவரும் போகியை கொண்டாடி வருகின்றனர்.

அறுவடை திருநாளாம் தை பொங்கல் நாளை கொண்டாடப்படுவதை ஒட்டி பிரதமர் திரு.நரேந்திரமோடி தமிழக மக்களுக்கு தமது நல் வாழ்த்துக்களை உரித்தாக்கியுள்ளார்.

தேச கட்டமைப்பில் வலுவான பங்களிப்பை வழங்கும் விவசாயிகளின் சீர்மிகு முயற்சிகள் தற்சார்பு இந்தியா இயக்கத்தை வெற்றியுடன் முன்னெடுத்து செல்வதாக பெருமிதம் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் இல்லத்தில் இன்று பொங்கல் விழாவில் பங்கேற்ற பிரதமர் சுய சார்பு பாரதத்திற்காக அயராது செயலாற்றி வரும் விவசாயிகளுக்கு ஆளுமை வழங்க மத்திய அரசு அர்ப்பணிப்புடன் உள்ளதாக கூறினார்.

தமிழக கலாச்சாரம், தேசம் முழுமைக்கான கலாச்சாரமாக மட்டுமல்லாமல், மனித நேயத்திற்கான கலாச்சார மரபுகளை முன்னெடுத்து செல்வதாகவும் தெரிவித்தார்.

தமிழக கலாச்சாரத்தின் அடித்தளமாக திகழும் விவசாயிகளின் அளப்பரிய சேவையை பிரதமர் பாராட்டினார்.

வாய்ஸ்

பொங்கல் பண்டிகை இயற்கை, குடும்பம் மற்றும் சமுதாயங்களுக்கிடையிலான சமன்பாட்டிற்கான பாதைக்கு வழிகாட்டுவதாக குறிப்பிட்டார்.

பொங்கல் பண்டிகை உலகம் முழுமைக்கான பண்டிகையாக தற்போது உருவெடுத்துள்ளதாக கூறிய பிரதமர், நிலத்திற்கும் சூரியனுக்கும் நன்றி தெரிவிக்கும் திருநாளாக இப்பண்டிகை திகழ்கிறது என்றார்.

நாட்டின் பிற பகுதிகளில் கொண்டாடப்படும் அறுவடை திருநாட்களான லோஹ்ரி, மகர சங்கராந்தி, மஹ் பிஹூ போன்றவற்றுடன் பொங்கல் பண்டிகையும் இணைந்து ஒரே பாரதம் உன்னத பாரதம் என்ற ஒருமைப்பாட்டுணர்வை வலுப்படுத்துவதாக பிரதமர் எடுத்துரைத்தார்.

புவி தாய் நமக்கு வழங்கியுள்ள ஏராளமான வள ஆதாரங்களை பாதுகாக்கும் பொறுப்பு நம் மக்களுக்கு உள்ளதாக கூறிய அவர், மண் வளம், நீர் பாதுகாப்பு உள்ளிட்ட வள ஆதாரங்களை எதிர்கால சந்ததியினருக்காக நாம் முறையாக பயன்படுத்துவதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

அன்னையின் பெயரால் மரம் வளர்ப்போம், நீர்வள பாதுகாப்பு, பசுமை வாழ்வாதார இயக்கம் போன்ற அரசின் முயற்சிகள் இந்த உணர்வை மேலும் வலுப்படுத்துவதாக கூறினார்.

உலகின் மிகவும் தொன்மையான தமிழ் மொழியின் வேர்கள் இந்தியாவை வலுப்படுத்தி புதிய வாய்ப்புகளுக்கு முன்னெடுத்து செல்வதாக கூறினார்.

*************

முதலமைச்சர் – சென்னை சங்கமம்

தமிழ்நாடெங்கும் புதுப்பானையில் பொங்கும் பொங்கல், மகிழ்ச்சி பொங்கலாக அமைந்திட, நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை உரித்தாக்குவதாக முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

சென்னையில் இன்று முதலமைச்சர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் உழவர் பெருங்குடி மக்களை வணங்கி புத்தாடை, வண்ணகோலம், உறவினர்களுடன் மகிழும் உற்சாகம், விளையாட்டு போட்டிகள், கலை நிகழ்ச்சிகள், கால்நடைகளுக்கு நன்றி செலுத்தும் பண்புகளோடு பொங்கல் இனிக்கட்டும் என வாழ்த்தியுள்ளார்.

பொங்கல் திருவிழாவிற்காக வெளியூர் சென்று திரும்புவோர் பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

சென்னை தலைமை செயலகத்தில் நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழாவில் பங்கேற்ற முதலமைச்சர் சென்னை

சங்கமம் கலை திருவிழாவை இன்று பிற்பகல் தொடங்கிவைக்கிறார்.

*************

சி.பி.ராதாகிருஷ்ணன்

குடியரசு துணைத்தலைவர் திரு.சி.பி.ராதா கிருஷ்ணன் திருப்பூரில் நாளை பொங்கல் பண்டிகை கொண்டாட்டங்களில் பங்கேற்கிறார்.

2 நாள் பயணமாக இன்று தமிழகம் வரும் அவர், கோவை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் புதிய புறநோயாளிகள் பிரிவு வளாகத்தை திறந்து வைத்து, கோவை தனியார் மருத்துவமனையின் பொன்விழா நிகழ்ச்சியில் பங்கேற்கிறார்.

*************

ஆயுதபடை தினம்

ஆயுதப்படையின் பழம் பெரும் வீரர்கள் தேச வலிமைக்கான துணிச்சல் மிகு சின்னத்தின் தூண்களாக திகழ்கிறார்கள் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில், முன்னாள் ஆயுதப்படை வீரர்களின் 10ஆவது ஆண்டு தினத்தை ஒட்டி இன்று உரையாற்றிய அவர், தேச கட்டமைப்பின் அனைத்து அம்சங்களிலும், இப்படைவீரர்களின் பங்களிப்பு உள்ளதாக குறிப்பிட்டார்.

ஒழுக்கம், தலைமைத்துவம், வீரம் போன்ற பண்புகள் மூலம் நாட்டிற்கு சிறந்த வழிகாட்டியாக திகழ்கிறார்கள் என்று புகழாரம் சூட்டினார்.

முன்னாள் ராணுவ வீரர்களின் சீருடையும், அவர்கள் பணியாற்றும் இடங்களும் மாறினாலும், தேச பக்தியிலும், சேவை மனப்பாங்கிலும் அதே உறுதியுடன் அவர்கள் திகழ்வதாக திரு.ராஜ்நாத்சிங் குறிப்பிட்டார்.

குடியரசுதலைவர் திருமதி திரௌபதி முர்மு விடுத்துள்ள செய்தியில் முன்னாள் ராணுவ வீரர்களின் அளப்பரிய துணிச்சல், ஒவ்வொரு இந்தியருக்கும் உத்வேகம் அளிப்பதாக குறிப்பிட்டார்.

நாடுமுழுவதும் 434 சைனிக் பள்ளிகளில் இத்தினம் கடைபிடிக்கப்படுகிறது.

1947-ம் ஆண்டு நடைபெற்ற போரில் இந்திய ராணுவத்தை வெற்றிக்கு அழைத்துச்சென்ற நாட்டின் முதல் தளபதி ஃபீல்டு மார்ஷல் கே.எம். கரியப்பா இந்திய ராணுவத்திலிருந்து ஓய்வுபெற்றதை குறிக்கும் வகையில் ஆண்டுதோறும் ஜனவரி 14-ம் தேதி இத்தினம் கடைபிடிக்கப்படுகிறது.

*************

மகேஷ்பொய்யாமொழி

தமிழ்நாட்டில் பகுதி நேர ஆசிரியர்களின் ஊதியம் 12 ஆயிரத்து 500 ரூபாயிலிருந்து 15 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படுவதாக மாநில பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி அறிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மே மாத ஊதியம் அவர்களுக்கு வழங்கப்படாத நிலையில்

இனி அம்மாதம் 10 ஆயிரம் ரூபாய் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

இடைநிலை ஆசிரியர்களின் கோரிக்கைகள் விரைவில் நிறைவேற்றப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பொங்கல் பண்டிகை என்பது உண்மையாகவே மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பதால் இந்த ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

பணியின்போது உயிரிழந்த இடைநிலை ஆசிரியர்களின் குடும்பத்தினருக்கு நிதி உதவி வழங்க வேண்டும் என்ற கோரிக்கையும் முதலமைச்சரிடம் வைக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

*************

பொங்கல் மாவட்டங்கள்

தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் சமத்துவ பொங்கல் விழா இன்று கொண்டாடப்பட்டது.

விருதுநகர் மாவட்டம் காரியாப்பட்டியில் மாநில நிதியமைச்சர் திரு.தங்கம் தென்னரசு இவ்விழாவில் பங்கேற்றார்.

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற பொங்கல் விழாவில் புலியாட்டம், ஒயிலாட்டம், சிலம்பாட்டம் உள்ளிட்ட பல்வேறு கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

அரியலூர் கங்க கொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் ஆலயத்தில் இஸ்ரேல் நாட்டிலிருந்து வந்த சுற்றுலா

பயணிகள் நாட்டுப்புற இசைக்கு நடனமாடி மகிழ்ச்சியுடன் பொங்கல் விழாவை கொண்டாடினர்.

திருச்சி காந்தி சந்தையில் பொங்கல் விழா விற்பனை களைகட்டியது. சுற்றுப்புற மாவட்டங்களிலிருந்து வந்த வியாபாரிகள் மஞ்சள் கொத்து, கரும்பு பூஜை பொருட்கள் உள்ளிட்ட அனைத்து பொருட்களை வாங்க குழுமியதால் அப்பகுதியில் போக்குவரத்து ஸ்தம்பித்தது.

*************

ஈரோடு

ஈரோடு மாவட்டத்தில் புஞ்சை புளியம்பட்டி வார சந்தையில் வாழைத்தார் விலை அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

*************

தோவாளை

பொங்கல் பண்டிகையை ஒட்டி கன்னியாகுமரி மாவட்டத்தில் பிரசித்திபெற்ற தோவாளை மலர் சந்தையில் பூக்களின் விலை அதிரிகத்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

*************

சபரிமலை

சபரிமலை சுவாமி ஐயப்பன் திருக்கோவிலில் மகர ஜோதி தரிசனம் இன்று மாலை நடைபெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயாராக உள்ளன.

பொன்னம்பலமேட்டில் நடைபெறும் மகர ஜோதியை தரிசனம் செய்ய ஏராளமான ஐயப்ப பக்தர்கள் அங்கு குவிந்துள்ளனர்.

*************

கிரிக்கெட்

ராஜ்கோட்டில் நியூசிலாந்துக்கு எதிரான 2-வது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் முதலில் பேட் செய்யும் இந்தியா சற்றுமுன் 5 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 10 ரன் எடுத்திருந்தது.

முன்னதாக டாஸ் வென்ற நியூசிலாந்து பந்துவீச தீர்மானித்தது.

*************

பேட்மிண்டன்

புதுதில்லியில் நடைபெறும் இந்திய ஓப்பன் பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு கிடாம்பி ஸ்ரீகாந்த் முன்னேறியுள்ளார்.

மற்றொரு போட்டியில் H.S. பிரணாய் – ஹாங்காங்கின் **Cheuk Yiu Lee-** ஐ எதிர்கொள்கிறார்.

*************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது